முருகப்பெருமான் துணை

**மகான் கேது பகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.12.2023**, வியாழக்கிழமை

1. தருமஞான பலம் கொண்ட
தவராஜனே அரங்கமகானே
கருமவினை வென்று மீட்கும்
கலியின் மகாசக்தி சொரூபனே
2. சொரூபனே ஆறுமுக ஞானியே
சுருதிபடி உன் பெருமை கூறி
பெருமைபட அறிவுரை ஆசி
புகலுவேன் சோபகிருது தேள் திங்கள்
3. திங்களிலே எழுநான்கு திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 28 ம் நாள், 14.12.2023, வியாழக்கிழமை)
தேசிகன் கேட்க கேதுபகவானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
உண்மை வழி காட்டும் அரங்கன்
4. அரங்கனின் சுத்த சன்மார்க்க
ஆன்மீக ஞானமே கலியினில்
வரங்கள் தரும் உயர்ஞானமாகும்
வணங்கி மக்களெல்லாம் நாடிவர
5. நாடிவர ஞான வாழ்வாகுமினி
நம்பிவர ஞானிகளாகவே
தடையற சித்தி பெறுகின்ற
தனிப்பெரும் வரமும் கிட்டும்
6. கிட்டவே மாதவசி அரங்கன்
கேட்காமலே உங்களுக்கு அருளும்
திட்டமுடன் அவதாரம் நிகழ்த்தி
தேசநலம் காக்க இருக்க

7. இருக்கவே அரங்கன் அன்னதான
இணையிலா சேவை தன்னில்
கருத்தாக இணைந்து மக்கள்
கடைத்தேற்றும் தருமநெறியை

8. தருமநெறியை தனிக் கவசமாக
தரணியோர் ஏற்றுத் தொண்டை
வறுமை பசிபிணி விரட்டும்
வரமாக வள்ளலாகச் செய்ய

9. செய்யவே புண்ணிய பலம் கூடி
செப்பிடுவேன் எந்த வகையிலும்
அய்யமற ஆறுமுகனார் அருள
ஆசி அருள் பலமும் கூடி

10. கூடியே அரங்கன் ஆசிபலம்
குருவருள் பலம் திருவருள் பலமாக
நாடியே ஞானிகள் ஆவர்
ஞானயுகம் படைத்து சிறப்பர்

11. சிறப்பான அறிவுரை ஆசி நூல்தானும்
செப்பிவந்த கேதுபகவான் என்னுடன் முற்றுப்பெற
மறுப்பின்றி இனி மகான்கள் எல்லாம்
மண்ணுலகுக்கு துல்லிய ஆசியாக அருளுவர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–